# 2026.10.19 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

## 01. சுரக்ஷா மாணவர் காப்புறுதி வேலைத்திட்டத்தை 2026/27 ஆம் ஆண்டில் அமுல்படுத்தல்

பல்வேறு காரணங்களால் கல்விக்கு தடைகள் ஏற்படுகின்ற மாணவர்களுக்கு அத்தடைகளைக் கடந்து சென்று தொடர்ச்சியாக கல்வியைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான சூழலை உருவாக்குகின்ற முக்கிய நோக்கத்துடன் சுரக்ஷா மாணவர் காப்புறுதி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அரச பாடசாலைகள், அரசின் அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் விசேட உதவிப் பாடசாலைகளில் கல்வி பயில்கின்ற மாணவர்களுக்கு இவ்வேலைத்திட்டத்தின் கீழ் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இயலுமை காணப்படுகின்றது. குறித்த மாணவர் காப்புறுதி வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்குரிய கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு மற்றும் ஸ்ரீலங்கா இன்ஸ்சூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிட்டட் இற்கிடையில் தற்போது வலுவிலுள்ள ஒப்பந்தம், 2026.09.01 ஆம் திகதி தொடக்கம் 2027.08.31 ஆம் திகதி வரைக்குமான காலப்பகுதிக்குரிய கீழ்க்காணும் புதிய அனுகூலங்களையும் உள்ளடக்கி, திருத்தம் செய்து அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையை கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- கேள் கருவிகள் (Hearing Accessories) திருத்தம் செய்வதற்கும் மற்றும் அதற்குச் செலவாகும் செலவுக் கட்டணங்களுக்கு 75,000/- வரையான அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு வழங்கல்
- Chronic Kidney Diseases மற்றும் Chronic Inflammatory Arthritis போன்ற நோய்களுக்கான நீண்டகாலமாக மருந்துகளை உட்கொள்கின்ற மாணவர்களுக்கு 20,000/- ரூபா வரையான அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு வழங்கல்
- Malignancy Screening Test for Skin Cancer and Post-transplant Lymphoproliferative Disorder (PTLD), Screening Test for Osteoporosis, Screening Test for Hepatitis B, Hepatitis C மற்றும் HIV போன்ற பரிசோதனைகளுக்கான செலவுகளுக்கு 20,000/- ரூபா வரையான அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு வழங்கல்.
- தீவிர நோய்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள 'Cancer Treatment' எனும் 'Cancer Treatment and related Testing' எனத் திருத்தம் செய்தல் மற்றும் திடீர் விபத்துக்களால் ஏற்படக்கூடிய இடுப்புப் பகுதி, தோள்பட்டை மற்றும் முழங்கால் மூட்டுக்களை மீளமைப்பதற்காக மேற்கொள்ளப்படும் முக்கிய சத்திரசிகிச்சைகள் மற்றும் PET Scan இற்கான செலவுகள் தீவிர நோய்கள் வகுதிக்குள் உட்சேர்த்தல்.
- பாடசாலை வளாகத்தில் அல்லது வெளியில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களால் ஒழுங்குபடுத்தப்படுகின்ற மற்றும் கல்வி அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளின் போது (கல்விச் சுற்றுலா மற்றும் விளையாட்டுக்களின் போது) திடீர் விபத்துக்களால் ஏற்படுகின்ற உயிரிழப்புக்கு திடீர் விபத்து வகுதியின் கீழ் 100,000/- ரூபா தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு வழங்கல்.



163, කිරුළපන මාවත, කොළඹ 05, ශ්‍රී ලංකාව.
163, கிருலபன எவனியூ, கொழும்பு 05, இலங்கை.
163, Kirulapona Avenue, Colombo 05, Sri Lanka.
දු தொ T - (+94 11) 2515759
ෆැ பெ F - (+94 11) 2514753
ඊ மி E - dg@dgi.gov.lk
www.dgi.gov.lk
www.news.lk

## 02. 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரச கடன் முகாமைத்துவ சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நிதி நிறுவனங்களுக்கான கடன் இடர்களை மதிப்பீடு செய்வதற்கான பொறிமுறையைக் கடைப்பிடித்தல்

2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரச கடன் முகாமைத்துவ சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அரச தொழில்முயற்சிகளுக்கான அரச கடன் பிணையோ அல்லது துணைக்கடன்களை வழங்குதல் பற்றிய இடர்களை மதிப்பீடு செய்வதற்கான பொறிமுறைக்கு இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இலங்கை மத்திய வங்கி மற்றும் சுய தொழில்களுக்கான பகுதியளவோ அல்லது முழுமையாகக் கடனுக்கு வழங்கல் அல்லது கடனுக்கு பெற்றுக் கொள்ளலை மேற்கொள்கின்ற நிதி நிறுவனங்கள், அரச கடன் முகாமைத்துவச் சட்டத்தின் அரச தொழில் முயற்சி எனும் பொருள்கோடலுக்கு உள்ளாகாது. அதனால், குறித்த நிறுவனங்களின் விசேடதன்மை, உயர்மட்ட கடன் நிதியிடல், பணத் திரவத்தன்மை மற்றும் சந்தை இடர், ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைகள் மற்றும் அவற்றின் ஆற்றல்வள முறைமையின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, அரச பிணையோ அல்லது துணைக்கடனை வழங்குதல் தொடர்பாக குறித்த நிறுவனங்களின் கடன் இடர்களை மதிப்பீடு செய்வதற்காக பொருத்தமான பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. இலங்கையில் அமுல்படுத்தப்படும் அதிகாரம் பெற்ற கடன் தரப்படுத்தல் நிறுவனங்களால் நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் தரப்படுத்தலை ஏற்புடையதாகக் கொண்டு, அரச கடன் முகாமைத்துவ அலுவலகத்தால் நிதி நிறுவனங்களுக்கான கடன் இடர்களை மதிப்பீடு செய்யும் பொறிமுறை தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இலங்கையின் நிதி நிறுவனங்கள் தொடர்பான கடன் இடர்களை மதிப்பீடு செய்வதற்கான குறித்த பொறிமுறையைக் கடைப்பிடிப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 03. அத்துல்கோட்டையில் அமைந்துள்ள நிப்பொன் மாவத்த ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டை மாநகர சபைக்குப் பாரப்படுத்தல்

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மாவத்த தொடக்கம் பத்தகான உயிர்ப் பல்வகைமைப் பூங்கா ஊடாக பத்தகான வீதிக்கு தொடர்புபடுகின்ற குறுக்கு வீதி நகர அபிவிருத்தி அதிகார சபை நிர்மாணித்துள்ளதுடன், இவ்வீதி நிப்பொன் மாவத்த என அழைக்கப்படுகின்றது. குறித்த வீதியின் மகிந்தாராம விகாரை தொடக்கம் பத்தகான வரைக்குமான நிப்பொன் மாவத்த வீதியின ஒருபகுதியை பராமரித்துப் பேணிச் செல்வதற்காக அளிப்புப் பத்திரத்தின் மூலம் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டை மாநகர சபைக்கு பாரப்படுத்துவதற்கு 2008.07.02 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மாவத்த தொடக்கம் ஸ்ரீ சுனேத்ராராம விகாரை வரைக்குமான நிப்பொன் மாவத்தயின் எஞ்சிய பகுதி சரியான வகையில் பராமரிப்பதற்கான பிரதேச வாழ் மக்களின் கோரிக்கையைக் கருத்தில் கொண்டு, குறித்த வீதியின் பகுதியையும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டை மாநகர சபைக்குப் பாரப்படுத்துவதற்கு 2025.03.12 அன்று இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரமும் கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கமைய, பாராமரித்து சரியான வகையில் பேணிச் செல்வதற்காக 02 ஏக்கர் 02 றூட் 31 பேர்ச்சர்ஸ் அளவுடைய வீதியின் பகுதியை, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டை நகர சபைக்கு அளிப்புப் பத்திரத்தின் மூலம் பாரப்படுத்துவதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. மாத்தறை, நாவிமன சார்க் கலாச்சார நிலையத்தின் வளாகம், இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கு பாரப்படுத்தல்**

மாத்தறை, நாவிமன சார்க் கலாச்சார நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் இவ்வளாகத்தைக் கல்வி நடவடிக்கைகளுக்கோ அல்லது தொழிற்பயிற்சிப் பணிகளுக்குப் பயன்படுத்துவதற்கான இயலுமையை ஆராய்வதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்குவதற்கு 2026.06.01 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தற்போது வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள கட்டிடங்கள் சிலவற்றில் நடாத்திச் செல்லப்படுகின்ற இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்காக அரைவாசி பூர்த்தி செய்யப்பட்டுள்ள 200,000 சதுர அடிகள் பரப்பளவைக் கொண்ட கட்டிட வளாகத்துடன் கூடிய 11 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள சார்க் கலாச்சார நிலையத்தை இப்பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைப்பது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் அமைச்சின் உடன்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கமைய, மாத்தறை, நாவிமன கலாச்சர நிலையத்தின் வளாகத்தில், இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. தெற்கு அதிவேக நெடுஞ்சாலை வீதியின் வெலிப்பன்ன பிரதேசத்தில் அமைந்துள்ள சேவைப் பிரதேசத்திற்கான அசுத்த நீர் சுத்திகரிப்புக் கட்டமைப்புக்கள் இரண்டினை (02) நிர்மாணிப்பதற்கான கருத்திட்டம்**

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் முழுமையான இணை நிறுவனமான கெனொவின் ஹோட்டல் அன்ட் ஸ்பாஸ் (தனியார் ) நிறுவனத்தால் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை வீதியின் வெலிப்பன்ன பிரதேசத்தில் அமைந்துள்ள சேவைப் பிரதேசம் நடாத்திச் செல்லப்படுகின்றது. குறித்த சேவைப் பிரதேசத்தில் தற்போது காணப்படுகின்ற அசுத்த நீர் சுத்திகரிப்பு கட்டமைப்புக்களின் கொள்ளளவு போதுமானதாக இல்லையெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதுதொடர்பாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் பரிசோதனைக்குட்படுத்தி அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வறிக்கை மூலம் நாளொன்றுக்கு 200 கனமீற்றர் கொள்ளவு கொண்ட இரண்டு (02) அசுத்த நீர் சுத்திகரிப்புக் கட்டமைப்புக்களை நிர்மாணிப்பதற்கு விதந்துரைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய,

562.04 மில்லியன் ரூபாய்கள் மதிப்பீட்டுச் செலவில் சேவைப் பிரதேசத்தின் அசுத்த நீர் சுத்திகரிப்புக் கட்டமைப்புக்கள் இரண்டினை (02) நிர்மாணிப்பதற்கான கருத்திட்ட ஒப்பந்தத்தை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு வழங்குவதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. கொலன்னாவ மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டம்**

கொலன்னாவ மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும், 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொறோனா றிலைமை மற்றும் அதன் பின்னல் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகள் காரணமாக கருத்திட்டக் கூறுகள் முற்கூட்டியே திட்டமிட்டவாறு அமுல்படுத்த முடியவில்லை. அதனால், கருத்திட்டத்தின் எஞ்சிய பணிகளுக்கான புதிய திட்டவரைபு மற்றும் அதற்கமைவான செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. புதிய திட்ட வரைபுக்கமைய, கருத்திட்டத்தின் பணிகள் கீழ்வரும் பிரதான கூறுகளின் கீழ் 15,077.82 மில்லியன் ரூபாய்கள் மதிப்பீட்டு செலவில் 03 ஆண்டு காலப்பகுதியில்

அமுல்படுத்துவதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது :

- தற்போது நிர்மாணிக்கப்படும் சலலிஹினி மாவத்த கால்வாய் வழியை (3,250 மீற்றர்) நிர்மாணித்து பூர்த்தி செய்தல் மற்றும் தஹம்வல கால்வாய் வழியை (3,868 மீற்றர்) நிர்மாணித்தல்
- கருத்திட்டத்தின் நீர்த்தடாகங்கள்/நீர் சேரும் இடங்களை அமைத்தல் போன்ற விசேட பணிகளை மேற்கொள்ளல்
- பஸ்ஸன்ன கால்வாய் வழி (4,475 மீற்றர்) மற்றும் தண்டுகொட்ட கால்வாய் வழி (650 மீற்றர்), தண்டுகொட்ட நீர்க் கட்டுப்பாட்டுக் கதவை அமைத்தல் மற்றும் ஒரு செக்கனுக்கு 01 கனமீற்றர் வீதம் மழைநீரை பம்பி மூலம் இறைப்பதற்கான நகர்த்தக்கூடிய 03 நீர்ப்பம்பிகளை நிறுவுதல்.
- கருத்திட்டத்தை அமுல்படுத்தும் போது கருத்திட்டப் பிரதேசத்தில் அமைந்துள்ள கட்டாயமாக சுவீகரிக்க வேண்டிய காணிகளை கையகப்படுத்தல் மற்றும் அதனால் பாதிக்கப்படுகின்ற குடும்பங்களுக்கு அவர்களின் அன்றாட வாழ்வாதார வழிகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் கருத்தில் கொண்டு, நட்டஈடுகளை வழங்குவதற்காக 1,015 மில்லியன் ரூபாய்கள் மதிப்பீட்டுடன் கூடிய உதவித்தொகைக் கொடுப்பனவு முன்மொழிவை அமுல்படுதல்

**07. இரத்தினபுரி புதிய நகரத்தில் 200 வீட்டலகுகளுடன் கூடிய அரச ஊழியர்களுக்கான உத்தியோகபூர்வ வீடமைப்புத் தொகுதியை நிர்மாணிக்கும் கருத்திட்டம்**

கௌரவ ஜனாதிபதி அவர்களின் தலைமையில் 2025.10.14 அன்று இடம்பெற்ற இரத்தினபுரி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், கொலின் கிறசன்ட் பிரதேசத்தில் அமைந்துள்ள அரச உத்தியோகபூர்வ இல்லங்களுக்குப் பதிலாக இரத்தினபுரி புதிய நகரில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணியில் அரச ஊழியர்களுக்கான 200 வீட்டலகுகளுடன் கூடிய அரச ஊழியர்களுக்கான உத்தியோகபூர்வ அடுக்குமாடி வீடமைப்புத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அத்துடன், தற்போது அரச உத்தியோகபூர்வ இல்லங்கள் அமைந்துள்ள அரசுக்குச் சொந்தமான காணிகளை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குப் பாரப்படுத்தி, எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களுக்கு மிகவும் பயனுறு வகையில் பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 5,886.97 மில்லியன் ரூபாய்கள் மதிப்பீட்டுச் செலவில் 05 ஆண்டு காலப்பகுதியில் குறித்த 200 வீட்டலகுகளுடன் கூடிய உத்தியோகபூர்வ இல்ல வீடமைப்புத் தொகுதியை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08.** இலங்கை பொலிசுக்கு 200 ஒற்றைரக கெப் வண்டிகளைக் கொள்வனவு செய்தல்

இலங்கை பொலிசின் கடமைகளுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள 200 ஒற்றைரக கெப் வண்டிகளை உள்நாட்டு சந்தையில் கொள்வனவு செய்வதற்காக 2026.02.23 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தேசிய போட்டி பெறுகை முறையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன், அதற்காக 07 விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. குறித்த விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர், உயர்மட்ட பெறுகைக் குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள விதந்துரைகளுக்கமைய, கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான M/s Diesel and Motor Engineering PLC இற்கு ஒரு ஒற்றைரக கெப் வண்டி 4,785,000/- ரூபாய்களுக்கு (பெறுமதி சேர் வரி நீங்கலாக) 200 ஒற்றை ரக (TATA YODHA PICKUP) கெப் வண்டிகளைக் கொள்வனவு செய்வதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற

விவகாரங்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. 2026 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்**

உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு நியாயமான போட்டித்தன்மையான பின்னணியை உறுதிப்படுத்தல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில், பயணிகள் மோட்டார் வாகனங்களுக்குப் பயன்படுத்தப்படும் டயர்கள் மற்றும் முச்சக்கர மோட்டார் ஊர்திகளின் காற்றடைக்கப்பட்ட டயர்கள் போன்ற இறக்குமதி டயர் வகைகளுக்கான இறக்குமதி சோதனை முறைகள், அதாவது, இலங்கை தரநிர்ணயத்தை விதிப்பதற்கு கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு விதந்துரைத்துள்ளது. குறித்த விதந்துரைகளைக் கருத்தில் கொண்டு, பயணிகள் மோட்டார் வாகனங்களுக்கான டயர் (HS குறியீடு 4011.10.90) இறக்குமதிக்கான இலங்கை தரநிர்ணயம் 1212 மற்றும் முச்சக்கர மோட்டார் ஊர்திகளின் காற்றடைக்கப்பட்ட டயர்கள் (HS குறியீடு 4011.90.10) இறக்குமதிக்கான இலங்கை தரநிர்ணயம் 1347 இனை விதித்து, 2508/27 ஆம் இலக்க மற்றும் 2026.10.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தற்போது வலுவிலுள்ள ஒழுங்குவிதிகளைத் திருத்தம் செய்வதற்காக 2026 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கமைய, குறித்த ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. அரச தனியார் பங்குடமை வணிகம் தொடர்பான சட்டமூலம்**

அரச தனியார் பங்குடமை வணிகங்களுக்கான தேசிய முகவராண்மையை நிறுவுதல் மற்றும் இலங்கையில் அரச தனியார் பங்குடமை வணிகங்களை ஊக்குவித்தல் மற்றும் அவற்றுக்கு வசதியளிப்பதற்கு சட்ட ஏற்பாடுகளை வகுத்து புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு 2025.06.02 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த சட்டமூலம் சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இச்சட்டமூலத்திற்கான சட்டபூர்வ ஒப்புதல் சட்டமா அதிபரால் வழங்கப்பட்டுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிப்பதற்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க ஆயள்வேத சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

ஆயள்வேதம், சித்த மருத்துவம், யுனானி, சுதேச சிகிச்சைகள் போன்ற மருத்துவ முறைகளுடன் கூடிய இலங்கையின் சுதேச மருத்துவத் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல், அபிவிருத்தி மற்றும் நிர்வாகம் 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க ஆயள்வேத சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்படுகின்றது. குறித்த சட்டத்தின் தேவைக்கமைய அவ்வப்போது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும், சுதேச மருத்துவத் துறையில் அனைத்துப் பணிகளும் பயனுள்ள வகையில் வினைத்திறனாக பேணிச் செல்லல், இத்துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் பணிகளை முறைமைப்படுத்தல், சுதேச மருந்து வகைகளின் ஏற்றுமதிக்குரிய அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல், சுதேச மருத்துவத் துறையின் முன்னேற்றம் மற்றும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை எட்டுதல் போன்ற நோக்கங்களை அடைவதற்கு இயலுமை கிட்டும் வகையில் சமகாலத்திற்குப் பொருத்தமான திருத்தங்களை அறிமுகப்படுத்தி ஆயுள்வேத சட்டத்தை மேலும்

திருத்தம் செய்ய வேண்டிய தேவை தற்போது கண்டறியப்பட்டுள்ளது. இவ்விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க ஆயுள்வேத சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கான சட்டமூலத்தைத் தயாரிப்பதற்கு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கு சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. 1982 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவன சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் செயலாற்றுகை மற்றும் நிர்வாகக் கட்டமைப்பு சமகாலத் தேவைக்குப் பொருத்தமான வகையில் தயாரிப்பதற்குத் தேவையான திருத்தங்களை உள்ளடக்கி, 1982 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவன சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2018.08.28 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இச்சட்டமூலத்தைத் தயாரிக்கும் பணிகள் சட்டவரைஞர் அவர்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இச்சட்டமூலத்தைத் தயாரிக்கும் பணிகளைப் பூர்த்தி செய்வதற்காக அமைச்சரவை கொள்கை அங்கீகாரம் வழங்குவதற்கு பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**13. அவைக்காற்றும் கலைஞர்களுக்கான ஜனாதிபதி நலன்புரி நிதியத்தின் பணிகள் டவர் நாடக மண்டப மன்றத்தின் மூலம் அமுல்படுத்தல்**

டவர் நாடக மண்டப மன்றத்தின் மூலம் பேணப்பட்டு வருகின்ற நியதிச்சட்டமல்லாத நிதியமான அவைக்காற்றும் கலைஞர்களுக்கான ஜனாதிபதி நலனோம்புகை நிதியத்தின் நடவடிக்கைகள் 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய முடிவுறுத்த வேண்டியுள்ளது. அதனால், குறித்த நிதியத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டுள்ள 80.8 மில்லியன் ரூபாய்கள் தொகையை டவர் நாடக மண்டப மன்றத்தின் கணக்கில் முதலீடு செய்வதற்கும், அதன் மூலம் ஈட்டப்படுகின்ற வருமானத்தைப் பயன்படுத்தி தற்போது அமுல்படுத்தப்படுகின்ற வயது முதிர்ந்த கலைஞர்களுக்கான மாதாந்த வாழ்வாதாரத்தை வழங்கும் வேலைத்திட்டத்தை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் அமைச்சர் அவர்களை அமைச்சரவையைத் தெளிவுபடுத்தினார், அதற்கு அமைச்சரவை உடன்பாடு வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

**14. தேசிய உயர் செயலாற்றுகை நிலையத்தை தாபித்தல்**

இலங்கையின் விளையாட்டு வீர வீராங்கனைகளிடமுள்ள விசேட மட்டத்திலான திறமைகள் காணப்படினும், குறித்த திறமைகள் நிலைபேறான சர்வதேச விளையாட்டு செயலாற்றுகையாக மாற்றும் போது ஒருங்கிணைந்த மற்றும் விஞ்ஞானபூர்வமான அடிப்படையில் உயர் செயலாற்றுகை விளையாட்டு முறைமையொன்று இன்மையால், ஒலிம்பிக் உள்ளிட்ட சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் இலங்கையின் போட்டித்தன்மையை அதிகரிப்பதற்கு முக்கிய தடையாக அமைந்துள்ளமை அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, உயர் செயலாற்றுகை அடிப்படை முறைமையை தாபித்தல் தொடர்பாக விதந்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அந்தந்த துறைசார்ந்த விசேட நிபுணர்களுடன் கூடிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரைகளின் அடிப்படையில், எதிர்வரும் காலங்களில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் மற்றும் 2028, 2032 மற்றும் 2036 ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் இலங்கையின் போட்டித்தன்மையை அதிகரிக்கும் வகையில் தேசிய உயர் செயலாற்றுகை நிலையத்தை 3,980 மில்லியன் ரூபாய்கள் செலவு மதிப்பீட்டின் கீழ் 2027 ஆம் ஆண்டு தொடக்கம் 03 ஆண்டு காலப்பகுதியில்

தியகம பிரதேசத்தில் நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. உத்தேச தியகம தேசிய உயர் செயலாற்றுகை நிலையத்தை நிர்மாணிக்கும் வரைக்கும், எதிர்காலத்தில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள சர்வதேச போட்டிகள் மற்றும் 2028 ஒலிமிபிக் விளையாட்டுப் போட்டியை இலக்காகக் கொண்டு அடையாளங் காணப்படும் விசேட திறமைகளைக் கொண்ட விளையாட்டு வீரர்களின் செயலாற்றுகையை அதிகரிப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு தேசிய உயர் செயலாற்றுகை நிலையத்தை டொரின்டன் விளையாட்டரங்கின் கேட்போர் கூடக் கட்டிடம் மற்றும் விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்திடமுள்ள உட்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தி ஆரம்பிப்பது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, உத்தேச தேசிய உயர் செயலாற்றுகை நிலையத்தை நிறுவுவதற்குரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விளையாட்டுக்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**15. அமரத்துவம் அடைந்த இலங்கை ராமஞ்ஞ மகாவிகாரையின் பிரதம சங்கைக்குரிய கெட்டம்பே இராஜோபவனாராமய விகாராதிபதி அதிவணக்கத்திற்குரிய கெப்பிட்டியாகொட சிறிவிமலாபிதான தேரர் அவர்களின் புனித தகனக்கிரியை அரச அனுசரணையில் நடாத்துதல்**

2026.10.18 அன்று அமரத்துவம் அடைந்த இலங்கை ராமஞ்ஞ மகாவிகாரையின் பிரதம சங்கைக்குரிய தேரர், கெட்டம்பே இராஜோபவனாராமய விகாராதிபதி, சிறிவந்தவிமல வங்சாலங்கார, சந்திரகீர்த்தி அமரவங்ச, சத்தர்மவாகீஸ்வர, சாசனசோபன, அதிவணக்கத்திற்குரிய கெப்பிட்டியாகொட சிறிவிமலாபிதான பிரதம சங்கைக்குரிய தேரர் அவர்களின் புனித தகனக்கிரியை 2026.10.21 அன்று கெட்டம்பே நகர விளையாட்டு மைதானத்தில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்புனித தகனக்கிரியை அரச அனுசரணையின் கீழ் நடாத்துவதற்கு பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் அமைச்சர் அவர்களும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**